சுருக்கம்

வேளாண்மை – உழவர் நலத்துறை – கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 2021-2022 – வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட தொகையிலிருந்து செலவிடப்படாத தொகை - ரூ.75.52 கோடியினை வேளாண்மைத்துறை மற்றும் பிற துறைகளுக்கு திட்டங்களை செயல்படுத்த பகிர்ந்தளித்தல்-ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை - உழவர் நலத் (வஇபதி) துறை

அரசாணை (நிலை) எண். 290 நாள்: 07.12.2022

திருவள்ளுவர் ஆண்டு, 2053
சுபகிருது, கார்த்திகை 21
படிக்கப்பட்டது:

1. வேளாண்மை நிதிநிலை அறிக்கை நாள் 14.08.2021, அறிவிப்பு எண்.1
2. அரசாணை (நிலை) எண். 59, வேளாண்மை – உழவர் நலத் (வஇபதி)துறை, நாள். 09.03.2022.
3. வேளாண்மை இயக்குநரின் கடிதம் எண். கலைஞர் திட்டம்/57204/2021, நாள் 25.10.2022 மற்றும் 02.11.2022.

---

ஆணை:

மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 2021-2022-ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில், “கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்” அறிவிக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:-

“ஐந்து ஆண்டுகளில் தமிழகம் முழுவதிலுமுள்ள அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளிலும் ஒட்டு மொத்த வேளாண் வளர்ச்சியை ஏற்படுத்திட அனைத்துத் துறைகளின் ஒருங்கிணைப்புடன் "கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்" என்ற மாபெரும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும். தமிழ்நாட்டில் தற்போது உள்ள 12,524 கிராமப் பஞ்சாயத்துகளில்

ஒவ்வொரு ஆண்டிலும், ஐந்தில் ஒரு பங்கு கிராமப் பஞ்சாயத்துகளை தேர்வுசெய்து, ஐந்தாண்டுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். தமிழ்நாட்டில் வேளாண்மையை விரிவுபடுத்துவதற்காக தரிசு நிலங்களை பரிசு நிலங்களாக ஆக்கி சாகுபடிப் பரப்பினை உயர்த்தும் பொருட்டு முதற்கட்டமாக, 2021-2022-ஆம் ஆண்டில், 2,500 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்."

2. மேற்காணும் அறிவிப்பினைத் தொடர்ந்து, 2021-2022 ஆம் ஆண்டில் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ஒருங்கிணைத்து செயல்படுத்திட ரூ.227.0588 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும், திட்ட செயலாக்கத்திற்கான மேற்கண்ட துறைகள் குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை அங்கீகரித்தும் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட வேளாண்மை இயக்குநரின் கடிதத்தில், 2021-2022-ஆம் ஆண்டிற்கான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், நடப்பு 2022-2023 ஆம் நிதி ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி 2021-2022- ஆம் ஆண்டில் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்திட வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ரூ.210.02 கோடி நிதி ஒதுக்கப்பட்டது எனவும், இதில் நீர் ஆதாரத்தை உருவாக்குதல் (ஆழ்துளைக் கிணறு / குழாய்க் கிணறு அமைத்தல்) இனத்தின் கீழ் 1,930 எண்கள் முன்மொழியப்பட்டதில், 965 தரிசுநிலத் தொகுப்புகள் ஏற்படுத்தப்பட்டு, அத்தொகுப்புகளில் நிலத்தடி நீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 533 இடங்களில் ஆழ்துளைக் கிணறு / குழாய்க் கிணறுகளும், 126 இடங்களில் ஊரக வளர்ச்சித் துறை மூலம் திறந்த வெளி கிணறுகள் ஆகியன மட்டுமே அமைக்கப்பட உள்ளதால், அவ்வினத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ.183.52 கோடியில் ரூ.67.50 கோடி மட்டுமே செலவிட இயலும் எனவும், ஆகவே வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒதுக்கப்பட்ட மொத்த தொகையான ரூ.210.02 கோடியில் ரூ.94.00 கோடி மட்டுமே செலவிட இயலும் என்பதால் ரூ.116.02 கோடி மீதம் உள்ளதாகவும் தலைமைப் பொறியாளர் (வேபொ) தெரிவித்துள்ளதாக வேளாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும், இது குறித்து 08.10.2022 அன்று வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் அவர்கள் தலைமையில் வேளாண்மை – உழவர் நலத்துறை துறைத் தலைவர்களுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில்

பின்வரும் இனங்களுக்கு ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்:-

i. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையான ரூ. 210.02 கோடியில், வேளாண்மைப் பொறியியல் துறையால் செலவிடப்படாத எஞ்சிய தொகை ரூ.116.02 கோடியில், ரூ.76.07 கோடியினை, வேளாண்மை – உழவர் நலத்துறையின் கீழ் செயல்படும் துறைகளுக்கு பின்வருமாறு நிதி ஒப்பளிப்பு செய்து அத்துறையின் மூலம் நடப்பு 2022-2023 ஆண்டில் செலவினம் மேற்கொள்ளவும், ஒப்பளிப்பு செய்யப்படும் இனங்களை 2021-2022 ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் 1,997 கிராமப் பஞ்சாயத்துக்களில் செயல்படுத்திட அனுமதி வழங்குமாறும்,

| வ.எண் | துறை | நிதி ஒப்பளிப்பு கோரப்படும் தொகை (ரூ.கோடி) |
|---|---|---|
| 1. | வேளாண்மைத்துறை | 10.70 |
| 2. | தோட்டக்கலைத்துறை மற்றும் மலைப்பயிர்கள்துறை | 20.60 |
| 3. | வேளாண்மை விற்பனை (ம) வேளாண் வணிகத்துறை | 5.50 |
| 4. | வேளாண்மைப் பொறியியல் துறை | 38.27 |
| 5. | சர்க்கரைத் துறை | 1.00 |
| | **மொத்தம்** | 76.07 |

ii. துறை மற்றும் இனம் வாரியாக இணைப்பு 1-இல் உள்ளவாறு வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மற்றும் சர்க்கரைத் துறைகள் செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும்,

iii. ஒப்பளிப்பு அளிக்கப்படும் நிதியில் சேமிப்பு ஏதேனும் ஏற்படின், நிதி இலக்கினை மாற்றாமல் பொருள் இலக்கினை துறைத்தலைவர்கள் மாற்றிக் கொள்ள அனுமதி வழங்குமாறும்,

iv. இத்திட்டத்திற்கென மாநில மற்றும் மாவட்ட அளவில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மற்றும் சர்க்கரைத்துறை ஆகிய துறைகள் புதியதாக வங்கிக்கணக்குகள் துவக்கி பராமரிக்க அனுமதி வழங்குமாறும் ,

v. 2021-2022 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் வேளாண்மை இயக்குநர் அவர்களால் தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மை பொறியியல் துறை அவர்களுக்கு பெற்றளிக்கப்பட்டு அவர்களின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு, செலவிடப்படாத ரூ.76.07 கோடி நிதியில் இருந்து வேளாண்மைத்துறைக்கு ரூ.10.70 கோடி நிதியினையும், தோட்டக்கலைத்துறைக்கு ரூ.20.60 கோடி நிதியினையும், இயக்குநர், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைக்கு ரூ.5.50 கோடி நிதியினையும் மற்றும் கூடுதல் தலைமைச் செயலர் / சர்க்கரைத்துறை ஆணையர், சர்க்கரைத்துறை அவர்களுக்கு ரூ.1.00 கோடி நிதியினையும் அத்துறையின் உரிய வங்கிக்கணக்கிற்கு தலைமைப் பொறியாளர் (வே.பொ) அவர்கள் வழங்கிட அனுமதி வழங்குமாறும்,

vi. மேலும் தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை அவர்கள் தற்போது ஒப்பளிப்பு செய்யப்படும் ரூ.38.27 கோடி நிதியினை இத்திட்டத்திற்கென ஏற்கனவே உள்ள வங்கிக்கணக்கின் இருப்பில் இருந்து செலவுகள் மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும்,

vii. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி மேற்கொள்ளப்படும் 1700 தூர்வாரி மேம்படுத்தும் பணிகள், வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களுக்கு அரசு நிர்ணயித்த வாடகையின் அடிப்படையில், மதிப்பீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மேலும் கூடுதலாக 300 பணிகள் மேற்கொள்ளவும், மொத்தமுள்ள 2000 பணிகளில், செய்து முடிக்கப்பட்ட பணிகள் தவிர இதர பணிகளில், தேவைக்கேற்ப கூடுதல் அளவில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. அவ்வியந்திரங்களின் வாடகை, அரசினால் தற்போது அதிகரித்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து தேவைப்படும் கூடுதல் நிதிக்கான அனுமதியை வழங்குமாறும்,

viii. வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்த உள்ள இனங்களுக்கான ரூ.10.70 கோடி தொகையினை தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை அவர்களுக்கும், தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்த உள்ள இனங்களுக்கான ரூ.20.60 கோடி தொகையினை மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு

தோட்டக்கலை வளர்ச்சி முகமை அவர்களுக்கும் தலைமைப் பொறியாளர் (வே.பொ) அவர்கள் வழங்க அனுமதி வழங்குமாறும்,

ix. துறை மற்றும் இனங்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை இணைப்பு 2-இல் உள்ளவாறு கடைபிடித்து செயல்படுத்திட அனுமதி வழங்குமாறும்,

x. மேலும், மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் அளிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் இணைப்பு – 3-இல் உள்ளவாறு சில திருத்தங்கள் மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும்,

xi. தற்போது இத்திட்டத்தின் கீழ் தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மை பொறியியல் துறை அவர்களின் வங்கிக் கணக்கில் உள்ள செலவிடப்படாத தொகையான ரூ.39.95 கோடி (ரூ.116.02 கோடி - ரூ.76.07 கோடி) மற்றும் அதற்கான வட்டித்தொகை ஏதும் இருப்பின் அவற்றினையும் சேர்த்து அரசு கணக்கில் செலுத்திட உரிய கணக்குத்தலைப்பினை வழங்குமாறும்,

xii. மேலும் இத்திட்டத்தினை செயல்படுத்தும் துறைகளுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில், நிதி சேமிப்பு ஏற்படுமாயின் அத்தொகையினை சம்மந்தப்பட்ட துறைகள் அதே கணக்குத்தலைப்பில் அரசுக்கு செலுத்திட அனுமதி வழங்குமாறும்,

xiii. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் அமைக்கப்படும் தரிசு நிலத் தொகுப்புகளுக்கான மேம்பாடு மற்றும் திட்ட செயலாக்க வழிமுறைகளை இணைப்பு 4 இல் உள்ளவாறு கடைபிடித்திட அனுமதி வழங்குமாறும் வேளாண்மை இயக்குநர் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து பின்வரும் இனங்களின் மீது கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடுகிறது:-

i. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை ரூ. 210.02 கோடியில், வேளாண்மைப் பொறியியல் துறையால் செலவிடப்படாத எஞ்சிய தொகை ரூ. 116.02 கோடியில், ரூ.75.52 கோடியினை வேளாண்மை – உழவர் நலத்துறையின் கீழ் செயல்படும் துறைகளுக்கு பின்வருமாறு நிதி ஒப்பளிப்பு செய்து அத்துறைகளின் மூலம் நடப்பு 2022-2023 ஆம் ஆண்டில் செலவினம் மேற்கொள்ளவும், ஒப்பளிப்பு செய்யப்படும்

இனங்களை 2021-2022 ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் 1,997 கிராமப் பஞ்சாயத்துக்களில் செயல்படுத்திட அனுமதி வழங்கியும்,

| வ.எண் | துறை | நிதி ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை (ரூ.கோடி) |
|---|---|---|
| 1. | வேளாண்மைத்துறை | 10.70 |
| 2. | தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை | 20.60 |
| 3. | வேளாண்மை விற்பனை (ம) வேளாண் வணிகத்துறை | 5.25 |
| 4. | வேளாண்மைப் பொறியியல் துறை | 37.97 |
| 5. | சர்க்கரைத் துறை | 1.00 |
| | மொத்தம் | 75.52 |

ii. மேற்கண்டவாறு ஒப்பளிப்பு செய்யப்படும் நிதியினை, துறை மற்றும் இனம் வாரியாக இணைப்பு 1-இல் உள்ளவாறு வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மற்றும் சர்க்கரைத் துறை ஆகிய துறைகள் செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்கியும்,

iii. ஒப்பளிப்பு செய்யப்படும் நிதியில் சேமிப்பு ஏதேனும் ஏற்படின், நிதி இலக்கினை மாற்றாமல் பொருள் இலக்கினை துறைத்தலைவர்கள் மாற்றிக் கொள்ள அனுமதி வழங்கியும்,

iv. இத்திட்டத்திற்கென மாநில அளவில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மற்றும் சர்க்கரைத்துறை ஆகிய துறைகள் புதியதாக வங்கிக்கணக்குகள் துவக்கி பராமரிக்க அனுமதி வழங்கியும்,

v. 2021-2022 ஆம் ஆண்டில் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வேளாண்மை இயக்குநர் அவர்களால் தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மை பொறியியல் துறை அவர்களுக்கு பெற்றளிக்கப்பட்டு தலைமைப் பொறியாளரின் (வேபொ) வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு, செலவிடப்படாத எஞ்சிய தொகையான ரூ.116.02 கோடியிலிருந்து,

வேளாண்மைத்துறைக்கு ரூ.10.70 கோடி நிதியினையும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறைக்கு ரூ.20.60 கோடி நிதியினையும், இயக்குநர், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைக்கு ரூ.5.25 கோடி நிதியினையும் மற்றும் ஆணையர், சர்க்கரைத்துறை அவர்களுக்கு ரூ.1.00 கோடி நிதியினையும் ஆக மொத்தம் ரூ37.55 கோடியினை அந்தந்த துறைகளின் உரிய வங்கிக்கணக்கிற்கு தலைமைப் பொறியாளர் (வே.பொ) அவர்கள் வழங்கிட அனுமதி வழங்கியும்,

vi. வேளாண்மைப் பொறியியல் துறைக்கு தற்போது ஒப்பளிக்கப்படும் ரூ.37.97 கோடி நிதியினை இத்திட்டத்திற்கென ஏற்கனவே உள்ள வங்கிக்கணக்கின் இருப்பில் இருந்து செலவுகள் மேற்கொள்ள தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறைக்கு அனுமதி வழங்கியும்,

vii. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி மேற்கொள்ளப்படும் 1700 தூர்வாரி மேம்படுத்தும் பணிகள், வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களுக்கு அரசு நிர்ணயித்த வாடகையின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், மேலும் கூடுதலாக 300 பணிகள் மேற்கொள்ளவும், மொத்தமுள்ள 2000 பணிகளில், செய்து முடிக்கப்பட்ட பணிகள் தவிர இதர பணிகளில், தேவைக்கேற்ப கூடுதல் அளவில் பணிகள் மேற்கொள்ளப்படவும் உள்ள நிலையில், அவ்வியந்திரங்களின் வாடகை, அரசினால் தற்போது அதிகரித்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து தேவைப்படும் கூடுதல் நிதியினை இவ்வினத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்படும் நிதியிலிருந்து பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்கியும்,

viii. வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்த உள்ள இனங்களுக்கான ரூ.10.70 கோடி தொகையினை தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை அவர்களுக்கும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை மூலம் செயல்படுத்த உள்ள இனங்களுக்கான ரூ.20.60 கோடி தொகையினை மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை அவர்களுக்கும் தலைமைப் பொறியாளர் (வே.பொ) அவர்கள் வழங்க அனுமதி வழங்கியும்,

ix. மேற்கண்டவாறு ஒப்பளிப்பு செய்யப்பட்ட நிதியில் செயல்படுத்தப்படவுள்ள துறை மற்றும் இனங்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை இணைப்பு 2-இல் உள்ளவாறு கடைபிடித்து செயல்படுத்திட அனுமதி வழங்கியும்,

x. மேலும், மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளில், இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு-3-இல் உள்ளவாறு திருத்தங்கள் வழங்கியும்,

xi. தற்போது, இத்திட்டத்தின் கீழ் தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மை பொறியியல் துறை அவர்களின் வங்கிக் கணக்கில் உள்ள செலவிடப்படாத தொகையான ரூ.40.50 கோடி (ரூ.116.02 கோடி - ரூ.75.52 கோடி) மற்றும் வட்டித்தொகை ஏதும் இருப்பின் அவற்றினையும் சேர்த்து அரசு கணக்கில் கீழ்க்கண்ட கணக்குத்தலைப்பில் செலுத்திட அனுமதி வழங்கியும்,

2401- 00 பயிர் வளர்ப்பு – 911 கழிக்கவும் – மிகையாக கொடுத்த தொகையை திருப்பிச் செலுத்துதல் – மாநிலச் செலவினங்கள் – கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் – 377 கழிக்கவும் – திருப்பி வசூலிப்பவை – 02 மிகையாகக் கொடுத்த தொகையை வசூலித்தல்/மிகையாகப் பெற்ற தொகையை திருப்பிச் செலுத்துதல்.

(த.தொ.கு. 2401 00 911 37702)

xii. இத்திட்டத்தினை செயல்படுத்தும் துறைகளுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில், நிதி சேமிப்பு ஏற்படுமாயின் அத்தொகையினை சம்மந்தப்பட்ட துறைகள் மேலேகூறப்பட்ட கணக்குத்தலைப்பில் அரசுக்கு செலுத்திட அனுமதி வழங்கியும்,

xiii. வேளாண் கருவிகளை கொள்முதல் செய்ய, மின்னணு விலைப்புள்ளி முறை (e-Tender) பின்பற்றப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதி வழங்கியும்,

xiv. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் அமைக்கப்படும் தரிசு நிலத் தொகுப்புகளுக்கான மேம்பாடு மற்றும் திட்ட செயலாக்க வழிமுறைகளை இணைப்பு 4-இல் உள்ளவாறு கடைபிடித்திட அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.539/ADS(GKT)/2022, நாள் 17.11.2022 இல் ஒப்புதலைப் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்**

<u>பெறுநர்</u>

இயக்குநர், வேளாண்மைத்துறை , சென்னை-5.

இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.

தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை, அண்ணாசாலை, சென்னை-35.

துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை, சென்னை-5.

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி மேம்பாட்டு முகமை, சென்னை-5.

இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, சென்னை-32.

ஆணையர், சர்க்கரைத்துறை , சென்னை -35.

அரசு முதன்மைச்செயலாளர், எரிசக்திதுறை, தலைமைச் செயலகம், சென்னை-9.

அரசு முதன்மைச்செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர்மேலாண்மைத்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.

அரசு முதன்மைச்செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை -9.

பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-3.

இயக்குநர், விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்றுத் துறை, சென்னை-32

முதன்மை மாநில கணக்காயர் (G&SSA), சென்னை-18.

முதன்மை மாநில கணக்காயர் (E&SSA), சென்னை-18.

மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை-18.

உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை -9.

சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 9.

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை-9.

மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை -9.

மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச்செயலகம், சென்னை-9.

மாண்புமிகு அமைச்சர் (மின்சாரம், மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச்செயலகம், சென்னை-9.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -9.

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை -9.

தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர், தலைமைச் செயலகம், சென்னை -9.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், வேளாண்மை – உழவர் நலத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.

நிதித் (வேளாண்-உழவர் நலத்) துறை, சென்னை-9.

வேளாண்மை – உழவர் நலத் (அனைத்து திட்டப்பிரிவுகள்) துறை, சென்னை -9,

உதவி நிரலர், வேளாண்மை – உழவர் நலத் துறை, சென்னை-9.

சம்மந்தப்பட்ட கோப்பு எண். e-842 /வஇபதி/2022.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 8/12/22

8/12/22

அரசாணை (நிலை) எண். 290, வேளாண்மை-உழவர்நலத் (வஇபதி) துறை, நாள்: 07.12.2022.

# இணைப்பு - 1

## துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்ட விவரங்கள்

### I. வேளாண்மைத்துறை

| வ. எண் | பணியின் விபரம் | மானிய விபரம் | மொத்த அலகுகள் (எண்கள்) | ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | விசைத் தெளிப்பான் விநியோகம் (Power /Battery Operated Sprayer)-12-16 லிட்டர் | விசைத் தெளிப்பான் ஒன்றின் விலையான ரூ.6000/-இல் 50% மானியத் தொகை ரூ.3,000/- | 20,000 எண்கள் | 6.00 |
| 2 | விவசாயிகளுக்கு தார்பாய்கள் வழங்குதல் | 50 சதவீத மானியம் அல்லது ரூ.1000 / தார்பாய் இதில் எது குறைவோ தேசிய உணவு பாதுகாப்பு திட்ட வழிகாட்டு நெறிமுறை (NFSM-TRFA Pulses) | 17,000 எண்கள் | 1.70 |
| 3 | பண்ணைக் கருவிகள் அடங்கிய தொகுப்பு (Farm implements Kits) | தொகுப்பு ஒன்றின் விலையான ரூ.3,000/- இல், 50% மானியத் தொகை ரூ.1,500/- e-tender முறை பின்பற்ற வேண்டும். | 20,000 எண்கள் | 3.00 |
| | மொத்தம் | | | 10.70 |

## II. தோட்டக்கலை (ம) மலைப்பயிர்கள் துறை

| வ. எண் | இனங்கள் | மானிய விபரம் | மொத்த அலகுகள் (எக்டர்/ எண்கள்) | ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம் (மா, கொய்யா, சப்போட்டா, கொடுக்காப்புளி, நாவல், சீத்தா, எலுமிச்சை, புளி, போன்றவை) | மொத்த விலையான ரூ.60,000-த்தில் 50 சதவீத மொத்தத் தொகையில் 60 சதவீத மானியமாக எக்டர் ஒன்றிற்கு ரூ. 18,000/- | 10,000 எக்டர் | 18.00 |
| 2 | ஐந்து வகையான பழச்செடிகள் அடங்கிய தொகுப்புகள் வழங்குதல் (மா, கொய்யா, நெல்லி, பலா, சீத்தா, எலுமிச்சை, போன்ற பழச்செடிகள் அடங்கிய தொகுப்பு ) | மொத்த விலையான ரூ.160-இல், 75 சதவீத மானியமாக தொகுப்பு ஒன்றிற்கு ரூ. 120/- | 1,33,333 எண்கள் | 1.60 |
| 3. | காளான் வளர்ப்புக்கூடம் அமைத்தல் | மொத்த விலையான ரூ.2,00,000-த்தில் 50 சதவீத மானியமாக அலகு ஒன்றிற்கு ரூ.1,00,000/- | 100 எண்கள் | 1.00 |
| | மொத்தம் | | | 20.60 |

## III. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை

| வ. எண் | பணியின் விபரம் | மானிய விபரம் | மொத்த அலகுகள் (எண்கள்) | ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | பல்நோக்கு உலர்களங்கள் (Multipurpose Drying Yard) | ஒரு உலர்களத்திற்கு ரூ.10.50 இலட்சம் வீதம். | 50 | 5.25 |
| | மொத்தம் | | | 5.25 |

## IV. வேளாண்மைப் பொறியியல் துறை

| வ. எண் | பணியின் விபரம் | ஓர் அலகு தொகை / மானிய விவரம் | கூடுதல் (எண்கள்) | ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | ஆதிதிராவிட (ம) பழங்குடியின விவசாயிகளுக்கு 100% மானியத்தில் கிணறுகள் (ஆழ்துளை (அ) குழாய்க் கிணறுகள்) அமைத்து சூரிய சக்தி மூலம் இயக்கப்படும் பம்பு செட்டு (அ) மின் மோட்டாருடன் நுண்ணீர் பாசன வசதி அமைத்து தருதல் | 100 சதவீத மானியம் | 200 | 12.00 |
| 2 | ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுபாசனக் குளங்கள், ஊரணிகள், குளங்கள் மற்றும் வரத்து கால்வாய்களை தூர்வாரி மேம்படுத்துதல் | 100 சதவீத மானியம் | 300 | 8.00 |
| 3 | டிராக் வகை நெல் அறுவடை இயந்திரங்கள் மற்றும் டிராக் வகை நெல் அறுவடை இயந்திரத்தினை சுமந்து செல்லும் வாகனங்களை வேளாண்மைப் பொறியியல் துறைக்கு கொள்முதல் செய்தல் | | | |
| | (i) டிராக் வகை நெல் அறுவடை இயந்திரம் | ஒரு இயந்திரத்திற்கு ரூ.32.00 இலட்சம் | 10 | 3.20 |
| | (ii) டிராக் வகை நெல் அறுவடை இயந்திரத்தினை சுமந்து செல்லும் வாகனம் | ஒரு வாகனத்திற்கு ரூ.20.00 இலட்சம். | 10 | 2.00 |
| | (iii) டிராக் வகை நெல் அறுவடை இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்குரிய ஒப்பந்தப் புள்ளி விளம்பரச் செலவு | | | 0.02 |

| வ. எண் | பணியின் விபரம் | ஓர் அலகு தொகை / மானிய விவரம் | கூடுதல் (எண்கள்) | ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| | மொத்தம் | | | 5.22 |
| 4 | விசை உழுவை இயந்திரங்கள் மானியத்தில் வழங்குதல் (Distribution of Power tillers) (வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்க திட்ட (SMAM) வழிகாட்டு நெறிமுறைகள்) | 50 (அ) 40 சதவீத மானியம், ஒரு இயந்திரத்திற்கு ரூ.85,000 | 1,500 | 12.75 |
| | ஆக மொத்தம் | | | 37.97 |

V. சர்க்கரைத் துறை

| வ. எண் | பணியின் விபரம் | மானிய விபரம் | மொத்த அலகுகள் (எண்கள்) | ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | பருசீவல் நாற்றுகள் விநியோகம் (Budchip Seedlings) | 50% மானியமாக எக்டர் ஒன்றிற்கு ரூ.12,500/- | 400 எக்டர் | 0.50 |
| 2 | ஒரு பரு விதைக் கரும்பு விநியோகம் (Single bud distribution) | 50% மானியமாக எக்டர் ஒன்றிற்கு ரூ.3,750/- | 1,333 எக்டர் | 0.50 |
| | மொத்தம் | | | 1.00 |
| | பெரு மொத்தம் | | | 75.52 |

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்
8/12/22

அரசாணை (நிலை) எண். 290, வேளாண்மை-உழவர்நலத் (வஇபதி) துறை, நாள்: 07.12.2022

# இணைப்பு-2

## கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 2021-2022-ஆம் நிதி ஆண்டில் செலவிடப்படாத தொகையினை செலவினம் மேற்கொள்ள துறை மற்றும் இனம் வாரியான வழிகாட்டு நெறிமுறைகள்

2021-2022-ஆம் ஆண்டில் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்திட தேர்வு செய்யப்பட்ட 1,997 கிராமப் பஞ்சாயத்துகளில் கீழ்காணும் துறைகளின் இனங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.

### அ) வேளாண்மைத்துறை

**I. விசைத்தெளிப்பான் (Power Operated / Battery operated sprayer) விநியோகம் – 12-16 லிட்டர்**

i) இவ்வினத்தின் கீழ் மானியமாக ஒரு விசைத் தெளிப்பானுக்கு ரூ.3,000/- அல்லது 50 சதவீதம் மானியம் இதில் எது குறைவோ அந்த தொகை மட்டும் மானியமாக வழங்கப்பட வேண்டும்.

ii) தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் ஒதுக்கீடு செய்யப்படும் விசைத் தெளிப்பான்கள் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ஒரு விசைத் தெளிப்பான் மட்டும் வழங்கப்பட வேண்டும்.

iii) சிறு / குறு விவசாயிகள் / ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு விசைத் தெளிப்பான் விநியோகத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

iv) விசைத் தெளிப்பான்கள் வேளாண்மை பொறியியல் துறை மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

v) இவ்வினத்தின் கீழ் வழங்கப்படும் தெளிப்பான்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரி செலவுகளை பயனாளிகளே ஏற்க வேண்டும்.

**II. விவசாயிகளுக்கு தார்பாய் வழங்குதல்**

i) இவ்வினத்தின் கீழ் ஒரு தார்பாய்க்கு 50 சதவீதம் மானியம் அல்லது ரூ.1000/- இதில் எது குறைவோ அவ்வளவிற்கு மானியம் வழங்கப்படும்.

ii) 5 மீட்டர் x 6 மீட்டர் அளவுள்ள HDPE Laminated Synthetic தார்ப்பாலின் 250 GSM thickness உள்ள வரையறை கொண்ட தார்பாய்கள் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

iii) சிறு / குறு விவசாயிகள் / ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தார்பாய்கள் விநியோகத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்,

iv) மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் தமது மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி இலக்கிற்கு மிகாமல் தார்பாய்களை தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகளின் வெளிப்படைத் தன்மை சட்டம் 1998 (Tamil Nadu Transparency in Tenders Act 1998) மற்றும் தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி வெளிப்படைத் தன்மை விதிமுறைகள், 2000 (Tamil Nadu Transparency in Tenders Rules 2000) கடைப்பிடித்து மாவட்ட அளவிலான வேளாண் கொள்முதல் குழு (District Level Procurement Committee) (DLPC) மூலம் கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

v) இவ்வினம் செயல்படுத்தப்படும் வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் முன்னுரிமை மற்றும் பயனாளிகள் பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும்.

vi) வேளாண்மை இணை இயக்குநர்கள் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்கள் தார்பாய்களின் தரத்தினை சரிபார்த்து உரிய நேரத்தில் விநியோகம் செய்ய வேண்டும்.

vii) இவ்வினத்தின் கீழ் வழங்கப்படும் தார்ப்பாய்களுக்கான சரக்கு மற்றும் சேவை வரி செலவுகளை பயனாளிகளே ஏற்க வேண்டும்.

III. பண்ணை கருவிகள் அடங்கிய தொகுப்பு (Farm Implements Kit)

i) சிறு / குறு விவசாயிகள் / ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு பண்ணைக் கருவிகள் அடங்கிய தொகுப்பு விநியோகத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்

ii) வேளாண்மை விரிவாக்க மையத்தில் பதிவேடுகள் பராமரித்து இந்த திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் பெயர்களை பதிவு செய்திட வேண்டும். பதிவேட்டில் உள்ள விவசாயிகளில் தகுதி வாய்ந்த விவசாயிகளுக்கு மூதுரிமை அடிப்படையில் வேளாண் கருவிகள் தொகுப்பினை வழங்க வேண்டும்.

iii) பண்ணைக்கருவிகள் அடங்கிய தொகுப்பினை கொள்முதல் செய்ய மின்னணு விலைப்புள்ளி முறையை (e.-Tender) பின்பற்ற வேண்டும்.

iv) இவ்வினத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய வேளாண் கருவிகள் மற்றும் அதன் விவரக் குறிப்புகள் மற்றும் அலகின் விலை மற்றும் வேளாண் உபகரண தொகுப்பு பற்றி விவரங்கள் கீழே அளிக்கப்படுகின்றன:-

வேளாண் உபகரண தொகுப்பின் விவரம்

| வ. எண் | கருவிகள் | விவரக்குறிப்பு | ஒரு அலகின் விலை (ரூபாயில்) | வேளாண் உபகரண தொகுப்பு (ஒரு தொகுப்பு) | |
|---|---|---|---|---|---|
| | | | | அளவு (எண் கள்) | முழு விலை (ரூபாயில்) |
| 1 | கடப்பாரை | ஒட்டு மொத்த நீளம் 60/75 அங்குலம், எடை 6-10 கிலோ & விட்டம் 25 மிமீ/28 மிமீ , 32 மிமீ | 1000 | 1 | 1000 |
| 2 | இரும்புச் சட்டி | கால்வனேற்றப்பட்ட இரும்பு பொருள் எடை: 800-900 கிராம் கொள்ளளவு 8-10 கிலோ, விட்டம் 18 அங்குலம் | 450 | 1 | 450 |
| 3 | களைக்கொத்து | நீளம் தோராயமாக 140 செ.மீ கைப்பிடி நீளம் 5" பொருள் மைல்டு ஸ்டீல் / ஹெவி டியூட்டி மெட்டல் துரு இல்லாதது | 350 | 1 | 350 |
| 4 | மண்வெட்டி | வலுவான கைப்பிடியுடன் பிளேடு இணைக்கப்பட்டுள்ளது பரிமாணம் 8.5" x 11" கைப்பிடி நீளம் 35 " | 800 | 1 | 800 |
| 5 | கதிர் அரிவாள் | பிறை வடிவ எடை 160 கிராம் நீளம் 30 செ.மீ அகலம் 12 செ.மீ ஆழம் 3.5 செ.மீ பொருள் டெம்பர்டு ஸ்டீல் பிளேடு, கத்தி வகை நிலையான கத்தி | 200 | 2 | 400 |
| மொத்தம் | | | | 6 | 3000 |

v) இவ்வினத்தின் கீழ் அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஒரு உபகரண தொகுப்பு மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

vi) இவ்வினத்தின் கீழ் மானியமாக ஒரு உபகரண தொகுப்பிற்கு ரூ.1,500/. அல்லது 50 சதவீதம் மானியம் இதில் எது குறைவோ அந்த தொகை மட்டுமே மானியமாக வழங்கப்பட வேண்டும்.

vii) இவ்வினத்தின் கீழ் வழங்கப்படும் பண்ணைக் கருவிகளுக்கான சரக்கு மற்றும் சேவை வரி செலவுகளை பயனாளிகளே ஏற்க வேண்டும்.

## ஆ. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை

### I. பல்லாண்டு தோட்டக்கலை பயிர்களின் பரப்பு விரிவாக்கம்

i) இவ்வினத்தின் கீழ் மா, கொய்யா, சப்போட்டா, கொடுக்காபுளி, நாவல், சீத்தா, எலுமிச்சை, புளி போன்ற தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பினை அதிகரிப்பதற்கு தேவையான நடவுச் செடிகள் மற்றும் இதர இடுபொருட்கள் வழங்கப்படும்.

ii) தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி செயல்படுத்தப்படும்.

iii) எக்டர் ஒன்றிற்கான மொத்தச் செலவினம் - ரூ.60,000/-

iv) மானியம் - 50 சதவீத மொத்த செலவினத்தில் முதலாமாண்டு 60 சதவீத மானியமாக ரூ.18,000/ எக்டர் வழங்கப்படும்.

v) ஒரு பயனாளி அதிகபட்சமாக 4 எக்டர் வரை பயன்பெறலாம்.

vi) சிறு / குறு பெண் விவசாயிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

### II. <u>பழச்செடிகள் தொகுப்புகள் வழங்குதல்</u>

i) மா, கொய்யா, நெல்லி, பலா, சீத்தா, எலுமிச்சை போன்ற 5 வகையான பழச்செடிகள் அடங்கிய தொகுப்பு வழங்கப்படும்.

ii) தொகுப்பு ஒன்றின் மொத்த விலை - ரூ.160/-.

iii) மானியம் – 75 சதவீதம் (தொகுப்பு ஒன்றிற்கு - ரூ.120/-).

iv) ஒரு தொகுப்பிற்கு பயனாளியின் பங்குத் தொகை ரூ.40/-.

v) போக்குவரத்து செலவு உட்பட மானியம் வழங்கப்படும்.

vi) ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சமாக ஒரு பழச்செடி தொகுப்பு மட்டுமே வழங்கப்படும்.

vii) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

viii) இத்திட்டம் செயல்படுத்துவதற்கு தேவையான பழச்செடிகள் அனைத்து அரசு தோட்டக்கலைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படும்.

ix) தரமான பழச்செடிகள் உற்பத்தியினை பண்ணை மேலாளர்கள் (தோட்டக்கலை அலுவலர்கள்) உறுதி செய்ய வேண்டும்.

x) தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து கிராமங்களிலும் தொகுப்புகள் முறையே வழங்குவதை வட்டார அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

III. <u>காளான் வளர்ப்புக்கூடம் அமைத்தல்</u>

i) காளான் வளர்ப்புக்கூடத்தின் அளவு – 600 சதுர அடி.

ii) ஒரு காளான் வளர்ப்புக்கூடம் அமைப்பதற்கு ஆகும் மொத்த செலவினம் - ரூ. 2.00 இலட்சம்.

iii) மானியம் – 50 சதவீத மானியமாக அலகு ஒன்றிற்கு ரூ.1.00 இலட்சம் வழங்கப்படும்.

iv) ஒரு பயனாளி அதிகபட்சமாக ஒரு அலகிற்கு மட்டுமே மானியம் பெற இயலும்.

v) பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

vi) சம்பந்தப்பட்ட மாவட்ட தோட்டக்கலை இணை / துணை இயக்குநர், அருகிலுள்ள வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர், உதவிப் பொறியாளர் (வேளாண் பொறியியல் துறை), தோட்டக்கலை அலுவலர் ஆகியோர்களின் கூட்டாய்வு அறிக்கையின் அடிப்படையில் 50 சதவீத மானியத் தொகையான ரூ.1.00 இலட்சம் பயனாளிக்கு பின்னேற்பு மானியமாக விடுவிக்கப்படும்.

**இ. வேளாண்மைப் பொறியியல் துறை**

**I. ஆதிதிராவிட (ம) பழங்குடியின விவசாயிகளுக்கு 100% மானியத்தில் கிணறுகள் (ஆழ்துளை (அ) குழாய்க் கிணறுகள்) அமைத்து சூரிய சக்தி மூலம் இயக்கப்படும் பம்பு செட்டு (அ) மின் மோட்டாருடன் நுண்ணீர் பாசன வசதி அமைத்து தருதல்**

i) தமிழ்நாடு முழுவதிலும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையினரால் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 2021-2022-ஆம் ஆண்டு பணி மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்ட 1997 பஞ்சாயத்து கிராமங்களில் உள்ள பாதுகாப்பான குறு வட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

ii) மேலும் இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு உரிய வருவாய் துறையின் மூலம் வழங்கப்பட்ட சாதி சான்று பெறப்பட வேண்டும்.

iii) சாத்தியமுள்ள இடங்களில் சூரிய சக்தி மூலம் இயக்கப்படும் பம்புசெட் (அதிகபட்சம் 10 HP வரை) அமைத்திட வேண்டும்.

**II. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுபாசன குளங்கள், ஊரணிகள், குளங்கள் மற்றும் வரத்துக் கால்வாய்களை தூர்வாரி மேம்படுத்துதல்.**

i) இத்திட்டம் சென்னை, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும்.

ii) மேற்கண்ட பணிகளை தேர்வு செய்யும்போது, கடந்த 3 ஆண்டுகளில் இதர துறைகளினால் தூர்வாரப்படாமல் உள்ள கிராம திட்ட செயலாக்கக்குழு கண்டறிந்த பணிகளில், தேவையின் அடிப்படையில் மாவட்ட கண்காணிப்பு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து மேற்கொள்ளப்படும்.

iii) பணிகள் ஆரம்பிக்கும் முன்பு கரைகளின் முன் அளவீடுகள் பதிவு செய்யப்பட வேண்டும்.

iv) தூர்வாரும் மண்ணைக்கொண்டு கரைகள் பலப்படுத்தப்படும்போது கரைகளின் மேல்மட்டம் மற்றும் பக்கவாட்டு சரிவுகள் முறையாக அமைக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

v) ஊரணிகள், குளங்களை தூர்வாரும் போது கரைகளை பலப்படுத்துதலுக்கு தேவைப்படும் மண் போக மீதமிருக்கும் மண்ணினை வருவாய் துறையின் அனுமதியினை பெற்று அருகாமையில் உள்ள இடங்களில் உரிய முறையில் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

vi) தூர்வாரும் பணிகளில் இயந்திரம் பயன்படுத்தப்பட்ட மணிநேரம் இயந்திர வாரியாக அளவீடு புத்தகத்தில் (M- Book) பதிவு செய்யப்பட வேண்டும்.

vii) இப்பணிகள் மேற்கொள்ளும் முன்பும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதும், முடிவுற்ற பின்பும் தேவையான புகைப்படங்கள் முழுமையாக எடுத்து ஆவணப்படுத்தல் வேண்டும்.

viii) வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களின், தற்போதைய நிலையிலான, அரசு அதிகரித்து நிர்ணயித்த வாடகையின் அடிப்படையில், பணிகளுக்கான செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**III. டிராக் வகை நெல் அறுவடை இயந்திரம் மற்றும் நெல் அறுவடை இயந்திரத்தை சுமந்து செல்லும் வாகனம் ஆகியவற்றினை வேளாண்மைப் பொறியியல் துறைக்கு கொள்முதல் செய்தல் மற்றும் பராமரித்தல்**

i) இவ்வினத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள டிராக் வகை நெல் அறுவடை இயந்திரங்கள் தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகளின் வெளிப்படைத் தன்மை சட்டம் 1998 (Tamil Nadu Transparency in Tenders Act 1998) மற்றும் தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி வெளிப்படைத் தன்மை விதிமுறைகள், 2000 (Tamil Nadu Transparency in Tenders Rules 2000)-இன்படி வேளாண்மைப் பொறியியல் துறைக்கு கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

ii) டிராக் வகை நெல் அறுவடை இயந்திரங்கள் இயக்குபவர்களை வெளிமுகமை ஒப்பந்த அடிப்படையில் (Outsourcing-Tender) நியமிக்கப்பட வேண்டும்.

iii) இவ்வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் இ-வாடகை என்னும் கைப்பேசி செயலியின் மூலம் முன்பதிவு செய்ய வேண்டும். இவ்வியந்திரங்கள் முன்னுரிமை அடிப்படையில் தேவைப்படும் விவசாயிகளுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த வாடகையில் வாடகைக்கு வழங்கப்பட வேண்டும்.

iv) இவ்வேளாண் இயந்திரங்கள் தேவைப்படும் விவசாயிகள் தங்களுக்கு தேவைப்படும் கால அளவிற்கு ஏற்ற வாடகைக் கட்டணத்தை இ-வாடகை கைப்பேசி செயலியின் மூலம் செலுத்த வேண்டும்.

v) விவசாயிகளிடமிருந்து பெறப்படும் இவ்வேளாண் இயந்திரங்களுக்கான வாடகைக் கட்டணம் அரசு கணக்கில் வரவாக செலுத்தப்பட வேண்டும்.

vi) இவ்வேளாண் இயந்திரங்களுக்கு தேவையான இயக்கச் செலவு (எரிபொருள் செலவு மற்றும் இயக்குபவர் சம்பளம்), பழுது பார்ப்பு மற்றும் பராமரிப்புச் செலவு முதலியன தொடர்புடைய உப கணக்குத் தலைப்பின் கீழ் அரசாங்க நிதியிலிருந்து பெறப்பட வேண்டும்.

## IV. விசை உழுவை இயந்திரங்கள் மானியத்தில் வழங்குதல்

i) விவசாயிகள் விசை உழுவை இயந்திரம் (பவர் டில்லர்) மானியத்தில் பெற, தங்கள் நில ஆவணங்கள் மற்றும் சாதி சான்றிதழ் நகலுடன் விண்ணப்பத்தினை சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர்(வேபொ) அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

ii) வேளாண்மைப் பொறியியல் துறையால் 2022-2023 ஆம் ஆண்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விசை உழுவை இயந்திரங்களை, நிறுவனங்களில், விவசாயிகள் தங்கள் விருப்பத்தின் பேரில், தங்களுக்குத் தேவையான மாடல்களை தேர்வு செய்து கொள்ளலாம்.

iii) விண்ணப்பங்கள் மூதுரிமை அடிப்படையில் விண்ணப்பப் பதிவேட்டில் பதியப்படும்.

iv) உதவிப் பொறியாளர்(வே.பொ) / இளநிலைப் பொறியாளர்(வே.பொ)கள் மூதுரிமைப்படி விண்ணபத்தாரரின் களத்திற்கு நேரில் சென்று, விவசாயி, மானியம் பெற தகுதியுடையவரா என ஆய்வு செய்வர்.

v) அதனடிப்படையில் உதவி செயற்பொறியாளர்(வேபொ) அவர்களால் விவசாயிகளுக்கு விண்ணப்பம் தேர்ந்தெடுக்கப்பட்ட விவரம் தெரிவித்து கடிதம் அனுப்பப்படும்.

vi) விவசாயி விசை உழுவை இயந்திரத்தின் மொத்தத் தொகைக்கான வரைவோலையினை, விசை உழுவை இயந்திரத்தின் உற்பத்தி நிறுவனம் (Manufacturer) அல்லது விநியோகஸ்தர்கள் (Sale Distributor)

பெயரில் எடுத்து 15 நாட்களுக்குள் நிறுவனம் அல்லது அவர்களது முகவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

vii) மேலும், வரைவோலையின் நகல் மற்றும் வரைவோலையைப் பெற்றுக் கொண்டதற்கான சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் அல்லது முகவர்களின் ரசீது ஆகியவற்றை விவசாயி உதவி செயற்பொறியாளர்(வேபொ) அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

viii) இவ்வாறு 15 நாட்களுக்குள் வரைவோலை சமர்ப்பிக்கப்படாவிட்டால், அவ்விவசாயியின் மூதுரிமை இரத்து செய்யப்பட்டு மூதுரிமை வரிசையிலுள்ள அடுத்த விவசாயி தேர்ந்தெடுக்கப்படுவார்.

ix) சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு, உதவி செயற்பொறியாளர்(வேபொ) அவர்கள் விசை உழுவை இயந்திர உற்பத்தி நிறுவனம் அல்லது முகவருக்கு வழங்கல் ஆணை (Supply order) வழங்குவர். அதன் நகல் செயற்பொறியாளர்(வேபொ) அவர்களுக்கும் அனுப்பப்படும்.

x) விசை உழுவை இயந்திரம் விவசாயிக்கு நன்கு இயங்கும் நிலையில் வழங்கப்பட வேண்டும். அதற்கான ரசீதில் உரிய என்ஜின் மற்றும் சேஸிஸ் எண் குறிப்பிடப்பட வேண்டும். விவசாயியின் கையொப்பமும் பெற்றிருத்தல் வேண்டும்.

xi) விவசாயி விசை உழுவை இயந்திரம் நன்றாக இயங்குவதற்கான சான்றினை அலுவலகத்தில் அளித்து, அதில் உதவி பொறியாளர் (வே.பொ) அல்லது இளநிலைப் பொறியாளர் (வே.பொ) அவர்களிடம் மேலொப்பம் பெற்றிருத்தல் வேண்டும்.

xii) மானியத்தில் வழங்கப்படும் விசை உழுவை இயந்திரத்தை, விவசாயிகள் அவற்றை வாங்கிய நாளிலிருந்து குறைந்தது நான்கு வருடங்களுக்கு விற்காமல், பராமரிப்பேன் உன்ற உறுதிமொழியை ரூ.30/-க்கான நீதிசாரா முத்திரை தாளில் விவசாயிகளிடமிருந்து ஒப்பந்தமாக பெறப்பட வேண்டும். மேலும் அவ்வொப்பந்தத்தில், "எதிர்காலத்தில், மானியத்தில் வழங்கும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விவசாயிகள் நான்கு வருடங்களுக்குள் விற்பது கண்டறியப்பட்டால், அளிக்கப்பட்ட முழு மானியத் தொகையையும் பயனாளி, பயனாளி இறந்திருந்தால் சட்டப்பூர்வ வாரிசுதாரர் திருப்பிச் செலுத்த சம்மதிக்கிறேன்" என்றும், விசை உழுவை இயந்திரம் தேவைப்படும் பிற விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் வழங்க சம்மதிக்கிறேன் என்றும் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

xiii) வழங்கப்பட்ட விசை உழுவை இயந்திரத்தின் என்ஜின் மற்றும் சேஸிஸ் எண்ணை உதவிப் பொறியாளர் (வே.பொ)/இளநிலைப் பொறியாளர்(வே.பொ)/உதவி செயற்பொறியாளர்(வேபொ) அவர்கள் நேரில் சென்று சரிபார்த்தபின் செயற்பொறியாளர்(வேபொ) அவர்களும் நேரில் சென்று சரிபார்த்தல் வேண்டும். பின்னரே வேளாண்

இயந்திரமயமாக்கும் துணை இயக்க வழிகாட்டு நெறிமுறைகளின்படி மானியம் வழங்கப்பட வேண்டும்.

xiv) கண்காணிப்பு பொறியாளர்(வேபொ)கள் மற்றும் செயற்பொறியாளர்கள் அவ்வப்போது முன் அறிவிப்பில்லாமல் கள ஆய்வு செய்து விசை உழுவை இயந்திரத்தின் இருப்பினை உறுதி செய்தல் வேண்டும்.

xv) விவசாயிகளை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வருடத்திற்கு ரூ.20 செலுத்தி "Pradhan Mantri Suraksha Bima Yojna" காப்பீட்டுத் திட்டத்தில் இணைய அறிவுரை வழங்க வேண்டும்.

xvi) இவ்வழிமுறைகள் அனைத்தும் முடிந்த ஒரு வாரகாலத்திற்குள் உரிய மானியத் தொகை பின்னேற்பு மானியமாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும். மானியம் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் விவசாயியிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

xvii) நிறுவனங்கள் அல்லது முகவர்கள் விசை உழுவை இயந்திரத்தின் பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் போன்றவற்றை உரிய நேரத்தில் மேற்கொள்கின்றனரா? என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

**ஈ. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை**

**I. உலர்களங்கள் அமைத்தல்**

i) இத்திட்டத்தின் கீழ், 50 உலர்களங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஓர் உலர்களமானது ரூ.10.50 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப்பணித்துறையின் விலைவிகித அடிப்படையில் (PWD Schedule of rates) கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும். இதன் மொத்த திட்ட செலவினம் ரூ. 5.25 கோடி ஆகும்.

ii) 2021-2022 கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட 1997 கிராம பஞ்சாயத்துகளில், மாவட்டத்திற்கு ஒரு உலர்களம் என்ற விகிதத்திலும் டெல்டா மாவட்டங்களுக்கு கூடுதலாக 2 உலர்களம் என்ற விகிதத்திலும் கிராம பஞ்சாயத்துகள் தேர்வு செய்யப்பட்டு விவசாயிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வர இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.

iii) இத்திட்டம் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மூலமாக செயல்படுத்தப்பட வேண்டும்.

iv) உலர்க்களங்கள் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டும்.

v) தானியங்களை உலர்த்தும் பணிகளை தவிர உலர்களங்களை பிற பயன்பாட்டிற்கு பயன்படுத்தக்கூடாது.

vi) உலர்களங்கள் அமைக்கப்பட்ட பின் பராமரிப்புக்கு தொடர்புடைய உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) அவர்களிடம் ஒப்படைக்கப்படும். இக்கட்டுமானத்தை தொடர்ந்து நன்கு பராமரித்திட வேண்டும்.

**உ. சர்க்கரைத்துறை**

**I. திட்ட இனங்களுக்கான பொதுவான வழிகாட்டு நெறிமுறைகள்**

i) 2021-22 கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட 1997 கிராமபஞ்சாயத்துகளில் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்படவேண்டும்.

ii) கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைப்பகுதிகளில் மேலாண்மை இயக்குநர் / தலைமை நிர்வாகிகள் மூலமாகவும், தனியார் சர்க்கரை ஆலைப்பகுதிகளில் வேளாண்மைத்துறை-மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் மூலமாகவும் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். இதற்கான ஆலைவாரியான, மாவட்ட வாரியான இலக்குகள் சர்க்கரைத்துறை ஆணையரால் பிரித்தளிக்கப்படவேண்டும்.

iii) கரும்பு பயிரிடும் விவசாயி ஒருவருக்கு ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக இரண்டு எக்டருக்கு மட்டுமே மானியம் வழங்கப்பட வேண்டும்.

iv) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

v) விநியோகத்தின் போது அதிக அளவில் குறு, சிறு மற்றும் பெண் விவசாயிகள் பயனடைதல் வேண்டும்.

vi) தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றப்பட வேண்டும்.

**II. பருசீவல் நாற்றுக்கள் வாங்கிட உதவித்தொகை வழங்குதல் ஒரு எக்டருக்கு ரூ.12500 (50 சதவீத மானியம்) – 400 எக்டர்- (ரூ. 0.50கோடி)**

i) ஒரு எக்டருக்கு12500 எண்கள் பருசீவல் நாற்றுக்களுக்கு 50 சதவீத மானியமாக ரூ. 12500 வழங்கப்பட வேண்டும்

ii) கரும்பு இனப்பெருக்க நிறுவனம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகள், முன்னோடி விவசாயிகள், தனியார் நாற்று விற்பனை மையங்களிலிருந்து - புத்தாக்கம் செய்யப்பட்ட கோ 86032, கோ 11015, கோஉ 09356, கோ 0212, கோக 13339, கோகு 6, கோகு 7, -ஆகிய கரும்பு இரக பருசீவல் நாற்றுக்களை விவசாயிகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

III. ஒருபரு விதைக்கரும்பு வாங்கிட உதவித்தொகை வழங்குதல் ஒரு எக்டருக்கு ரூ.3750 (50 சதவீத மானியம்)–1333 எக்டர்- (ரூ. 0.50கோடி)

i) ஒரு எக்டருக்கு2.5 மெட்ரிக் டன் ஒருபரு விதைக்கரும்பிற்கு 50 சதவீத மானியமாக ரூ. 3750 வழங்கப்பட வேண்டும்.

ii) கரும்பு இனப்பெருக்க நிறுவனம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகள், முன்னோடி விவசாயிகள், தனியார் நாற்று விற்பனை மையங்களிலிருந்து - புத்தாக்கம் செய்யப்பட்ட கோ 86032, கோ 11015, கோஉ 09356, கோ 0212, கோக 13339, கோகு 6, கோகு 7, ஆகிய கரும்பு இரக ஒரு பரு விதைக்கரும்பு வாங்கிட வேண்டும்.

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர் 8/12/22

அரசாணை (நிலை) எண். 290, வேளாண்மை-உழவர்நலத் (வஇபதி) துறை, நாள்: 07.12.2022.

## இணைப்பு - 3

### கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 2021-2022 ஆம் ஆண்டிற்காக வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.59, வேளாண்மை –உழவர் நலத் (வஇபதி)துறை, நாள்.09.03.2022-இல் வழங்கப்படும் திருத்தங்கள்

1. வேளாண்மைத் துறை

| வ. எண் | அரசாணை (நிலை) எண்.59, வேளாண்மை – உழவர் நலத் (வஇபதி)துறை, நாள்.09.03.2022 | வழங்கப்படும் திருத்தங்கள் |
|---|---|---|
| 1 | இணைப்பு :I<br>அ. அனைத்து துறைகளுக்ககான பொதுவான திட்ட செயலாக்க வழிமுறைகள்:<br>6. தரிசு நிலத் தொகுப்புகளை கண்டறியும் வழிமுறைகள் :<br>ii) குறைந்தபட்சம் 15 ஏக்கர் தரிசு நிலத் தொகுப்புகள் மற்றும் 15 ஏக்கருக்கு அதிகமாகவும் 35 ஏக்கர் வரை உள்ள தரிசு நிலத் தொகுப்புகள் என இருவகையான தரிசு நிலத் தொகுப்புகளைக் கண்டறிய வேண்டும். | இணைப்பு : I அ. 6( ii)-ல் கூடுதலாக :<br>மேலும் கூடுதலாக திட்டத்தினை விரிவுபடுத்தும் நோக்கில் 10 முதல் 15 ஏக்கர் வரை தொடர்ச்சியான தரிசு நிலங்களை கண்டறிந்து புதிய தொகுப்புகளாக அமைத்துக் கொள்ளலாம்.<br>அவ்வாறு கண்டறியும்போது வழிகாட்டுதலின் படி தரிசு நிலங்கள் தொடர்ச்சியாக இல்லாத பட்சத்தில் இடையில் உள்ள 2-3 ஏக்கர் சாகுபடி நிலங்களையும் தொகுப்புக்குள் கொண்டு வந்து தொடர்ச்சியான தரிசு நிலத் தொகுப்பாக அமைத்துக் கொள்ளலாம். |
| 2 | இணைப்பு :II, 1(iii)<br>ஒரு பண்ணைக் குடும்பத்திற்கு அதிகபட்சம் 3 நெட்டை தென்னங்கன்றுகள் மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும். | இணைப்பு :II, 1(iii)<br>ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சம் 3 நெட்டை தென்னங்கன்றுகள் மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும். |
| 3 | இணைப்பு :II<br>அரசு ஆணையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட இனங்களான தென்னங்கன்றுகள் விநியோகம், வரப்புப் பயிருக்கான பயறு வகை விதை | இணைப்பு :II<br>அரசு ஆணையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட இனங்களில் நிதி சேமிப்பு ஏற்படின் நிதி இலக்கினை மாற்றாமல் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த |

| வ. எண் | அரசாணை (நிலை) எண்.59, வேளாண்மை – உழவர் நலத் (வஇபதி)துறை, நாள்.09.03.2022 | வழங்கப்படும் திருத்தங்கள் |
|---|---|---|
| | விநியோகம், கைத்தெளிப்பான்கள் மற்றும் விசைத்தெளிப்பான்கள் (Battery / Power operated sprayers) இனங்களுக்கான ஒதுக்கப்பட்ட நிதி இலக்கில் நிதி சேமிப்பு. | வேளாண் வளர்ச்சித் திட்ட கிராமங்களில் தேவையின் அடிப்படையில் பொருள் இலக்கினை மாற்றி செயல்படுத்திட அனுமதி வழங்கப்படுகிறது. |

2.தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

| வ. எண் | அரசாணை (நிலை) எண்.59, வேளாண்மை – உழவர் நலத் (வஇபதி)துறை, நாள்.09.03.2022 | வழங்கப்படும் திருத்தங்கள் |
|---|---|---|
| 1 | இணைப்பு -II<br>தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை திட்டத்தின் இனம்வாரியான வழிகாட்டு நெறிமுறைகள் :<br>4) விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்க வரப்பு ஓரங்களில் பழச்செடிகள் மற்றும் மரக்கன்றுகள் நடுதல்<br>iv) ஒரு விவசாயிக்கு அதிக பட்சமாக ஒரு மரக்கன்று தொகுப்பு மட்டுமே வழங்கப்பட வேண்டும். | இணைப்பு -II<br>தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை திட்டத்தின் இனம்வாரியான வழிகாட்டு நெறிமுறைகள் :<br>4) விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்க வரப்பு ஓரங்களில் / வீட்டுப் புறப் பகுதிகளில் பழச்செடிகள் மற்றும் மரக்கன்றுகள் நடுதல்<br>iv) ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சமாக ஒரு மரக்கன்று தொகுப்பு மட்டுமே வழங்கப்பட வேண்டும். |

3. வேளாண்மைப் பொறியியல் துறை

| வ. எண் | அரசாணை (நிலை) எண்.59, வேளாண்மை –உழவர் நலத் (வஇபதி)துறை, நாள்.09.03.2022 | வழங்கப்படும் திருத்தங்கள் |
|---|---|---|
| 1 | அரசாணை எண். 59, வேளாண்மை – உழவர் நலத் (வஇபதி) துறை, நாள். 09.03.2022-இல் வழங்கப்பட்ட ஆணையில் கூடுதலாக ஆணை கோருதல். | **அரசாணை எண். 59, வேளாண்மை – உழவர் நலத் (வஇபதி) துறை, நாள். 09.03.2022-இல் வழங்கப்பட்ட ஆணையில் வரிசை எண். VIII-ன் கீழ் கூடுதலாக கீழ்க்காணும் பத்தியினை சேர்க்க வேண்டும்.**<br><br>VIII. அ) கலைஞரின் அனைத்துக் கிராம |

| வ. எண் | அரசாணை (நிலை) எண்.59, வேளாண்மை -உழவர் நலத் (வஇபதி)துறை, நாள்.09.03.2022 | வழங்கப்படும் திருத்தங்கள் |
|---|---|---|
| | | ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட 2500 கிராமங்களில், 1192 இடங்களில், நிலநீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு ஒரு இடத்திற்கு ரூ.500/- முதல் ரூ.2500/- வரை இத்திட்டத்தில் இனம்-1-ன்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து 1192 இடங்களுக்கு செலவினம் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது.<br><br>VIII. ஆ). பாசனவசதி ஏற்படுத்திட கண்டறியப்பட்ட தொகுப்புகளில் நிலநீர் ஆய்வு மேற்கொண்டு அதனடிப்படையில் திறந்தவெளிக் கிணறுகள் அமைப்பதற்கு பரிந்துரைக்கப்பட்ட 126 இடங்கள் மற்றும் கூடுதலாக ஏற்படுத்தப்படும் திறந்த வெளிக் கிணறுகளின் விவரங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலமாக முடிக்கப்பட்ட பின் நீரிறைக்கும் அமைப்பு (மின் / சூரிய சக்தி) உள்ளிட்ட இதர பணிகளுக்கான நிதி செலவினத்தை வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது.<br><br>VIII. இ). கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 28 இடங்களில் அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணறுகளில், பயனுராத / வெற்றியடையாத ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் வருங்காலத்தில் ஏதேனும் பயனுராத / வெற்றியடையாத கிணறுகள் உருவாகும்பட்சத்தில் அந்தக் கிணறுகளையும் கண்காணிப்பு கிணறுகளாக நீர்வளத்துறைக்கு ஒப்படைத்திடவும், அப்பணிகளுக்குரிய |

| வ. எண் | அரசாணை (நிலை) எண்.59, வேளாண்மை -உழவர் நலத் (வஇபதி)துறை, நாள்.09.03.2022 | வழங்கப்படும் திருத்தங்கள் |
|---|---|---|
| | | செலவினத்தை அரசாணை எண். 59-இல் வேளாண்மைப் பொறியியல் துறையின் திட்டப்பணிகளில் உள்ள இனம்-1-ன்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கப்படுகிறது. |
| 2 | **அரசாணை எண். 59, வேளாண்மை – உழவர் நலத்** (வஇபதி) துறை, நாள். 09.03.2022-இல் வழங்கப்பட்ட ஆணையில் வரிசை எண். XVIII- ல் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள இயந்திரங்களை பயன்படுத்தி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 500 சிறுபாசன குளங்கள், 100 ஊரணிகள், 500 குளங்கள் மற்றும் 600 வரத்துக் கால்வாய்களை தூர்வாருதல், மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்த அறிவுறுத்தியும் ஆணை வெளியிடப்படுகிறது. | **அரசாணை எண். 59, வேளாண்மை – உழவர் நலத் (வஇபதி) துறை, நாள். 09.03.2022-இல் வழங்கப்பட்ட ஆணையில் வரிசை எண். XVIII-க்கு பதிலாக**<br>XVIII.வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள இயந்திரங்களை பயன்படுத்தி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுபாசன குளங்கள், ஊரணிகள், குளங்கள் மற்றும் வரத்துக் கால்வாய்களை, கள ஆய்வின் அடிப்படையில் தூர்வாரி மேம்படுத்துதல் போன்ற பணிகளை குறைந்தபட்சம் 2000 எண்கள் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்திடவும் பணி இனங்களிடையே எண்ணிக்கைகளை மாற்றி அமைத்திடவும் தலைமைப் பொறியாளர் (வே.பொ) அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. |
| 3 | இணைப்பு: II<br>**வேளாண்மைப் பொறியியல் துறை திட்டத்தின் இனவாரியான வழிகாட்டு நெறிமுறைகள் - 1(ஆ)-இல் உள்ள மின் சக்தியால் இயங்கும் பம்பு செட் அமைப்பு வரிசை எண். (i)-**<br>(i)- **மின் சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள், எலக்ட்ரிக் பேனல், ஸ்டார்டர்** | **இணைப்பு: II வேளாண்மைப் பொறியியல் துறை திட்டத்தின் இனவாரியான வழிகாட்டு நெறிமுறைகள் - 1(ஆ)-இல் உள்ள மின் சக்தியால் இயங்கும் பம்பு செட் அமைப்பு வரிசை எண். (i)- க்கு பதிலாக**<br><br>(i)- மின் சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் அதனை நிறுவி இயக்கிட தேவைப்படும் எலக்ட்ரிக் பேனல், ஸ்டார்டர் உள்ளிட்ட தேவையான பாதுகாப்பு கட்டமைப்பு வசதிகளுடன் அதிகபட்சமாக 15 HP கொண்ட |

| வ. எண் | அரசாணை (நிலை) எண்.59, வேளாண்மை -உழவர் நலத் (வஇபதி)துறை, நாள்.09.03.2022 | வழங்கப்படும் திருத்தங்கள் |
|---|---|---|
| | ஆகியவற்றிக்கு தேவையான பாதுகாப்பு கட்டமைப்பு வசதிகளுடன் அதிகபட்சமாக 10 HP கொண்ட மோட்டாருக்கான செலவினம் அரசால் ஏற்கப்படும். | மோட்டாருக்கான செலவினம் அரசால் ஏற்கப்படும். |
| 4 | இணைப்பு:II வேளாண்மைப் பொறியியல் துறை திட்டத்தின் இனவாரியான வழிகாட்டு நெறிமுறைகள் - 2-இல் உள்ள ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் கிணறுகள் (ஆழ்துளைக் அல்லது குழாய்க் கிணறுகள்) அமைத்து மின் மோட்டாருடன் நுண்ணீர் பாசன வசதி அமைத்து தருதல் | இணைப்பு :II வேளாண்மைப் பொறியியல் துறை திட்டத்தின் இனவாரியான வழிகாட்டு நெறிமுறைகள் - 2-இல் உள்ள ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் கிணறுகள் (ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள்) அமைத்து மின் மோட்டாருடன் நுண்ணீர் பாசன வசதி அமைத்து தருதல் பத்தியின் தலைப்பிற்கு பதிலாக:<br>ஆதிதிராவிட (ம) பழங்குடியின விவசாயிகளுக்கு 100% மானியத்தில் கிணறுகள் (ஆழ்துளை (அ) குழாய்க் கிணறுகள்) அமைத்து சூரிய சக்தி மூலம் இயக்கப்படும் பம்பு செட்டு (அ) மின் மோட்டாருடன் நுண்ணீர் பாசன வசதி அமைத்து தருதல். |
| | i. இத்திட்டம் அரியலூர், செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், இராமநாதபுரம், புதுக்கோட்டை, தேனி மற்றும் விருதுநகர் ஆகிய எட்டு மாவட்டங்களில் உள்ள 200 ஆதிதிராவிட, பழங்குடியின விவசாயிகளின் நலனுக்காக, நிலத்தடி நீர் பாதுகாப்பான குறுவட்டங்களில் ஆழ்துளைக் அல்லது குழாய்க்கிணறுகள் அமைத்து மின்வசதியுடன், மின்மோட்டார் பொருத்தி, நுண்ணீர் பாசன வசதிகள் 100 | இணைப்பு :II வேளாண்மைப் பொறியியல் துறை திட்டத்தின் இனவாரியான வழிகாட்டு நெறிமுறைகள் - 2-இல் உள்ள ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் கிணறுகள் (ஆழ்துளைக் அல்லது குழாய்க் கிணறுகள்) அமைத்து மின் மோட்டாருடன் நுண்ணீர் பாசன வசதி அமைத்து தருதல் பத்தியின் வரிசை எண். i-க்கு பதிலாக:<br>தமிழ்நாடு முழுவதிலும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினரால் அனைத்துக் கிராம அண்ணா |

| வ. எண் | அரசாணை (நிலை) எண்.59, வேளாண்மை -உழவர் நலத் (வஇபதி)துறை, நாள்.09.03.2022 | வழங்கப்படும் திருத்தங்கள் |
|---|---|---|
| | சதவீத மானியத்தில் செயல்படுத்தப்படும். | மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 2021-2022-ஆம் ஆண்டு பணி மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்ட 1997 பஞ்சாயத்து கிராமங்களில் உள்ள நிலத்தடி நீர் பாதுகாப்பான குறு வட்டங்களில் ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள் அமைத்து சூரிய சக்தி மூலம் இயக்கப்படும் பம்பு செட் அல்லது மின் மோட்டாருடன் நுண்ணீர் பாசன வசதிகள் 100 சதவீத மானியத்தில் செயல்படுத்தப்படும். |
| | iii. இத்திட்டம் "பிரதம மந்திரி நீர்ப் பாசனத் திட்டம் – ஒவ்வொரு வயலுக்கும் நீர் – நிலத்தடி நீர்ப் பாசனத் திட்டத்தின்" வழிகாட்டு நெறிமுறைகளின்படி செயல்படுத்தப்படும். | வரிசை எண். iii-ன் கீழ் கூடுதலாக கீழ்க்காணும் பத்தி சேர்க்கப்பட வேண்டப்படுகிறது.<br>iv. சாத்தியமுள்ள இடங்களில் சூரிய சக்தி மூலம் இயக்கப்படும் பம்புசெட் (அதிகபட்சம் 10 HP வரை) அமைத்திட அனுமதி அளிக்கப்படுகிறது. |

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்**

**//உண்மை நகல்//**

பிரிவு அலுவலர்.

அரசாணை(நிலை) எண்.290, வேளாண்மை-உழவர்நலத் (வஇபதி) துறை, நாள் 07.12.2022.

## இணைப்பு - 4

**கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்ட தரிசு நில தொகுப்பு மேம்பாடு திட்ட செயலாக்க வழிமுறைகள்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு திட்டங்களில் ஒன்றான கூடுதலாக 11.75 இலட்சம் எக்டர் நிலங்களை சாகுபடிக்கு கொண்டுவருதல் அதாவது தற்போதைய பயிர் சாகுபடி பரப்பை 60 சதவீதத்திலிருந்து 75 சதவீதமாக அதிகரித்தல் என்ற நோக்கத்தை அடையும் ஒரு திட்டமாக "**கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம்**" செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளில் 5 ஆண்டுகளில் **ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சி மற்றும் தன்னிறைவு** அடைந்திட இத்திட்டம் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் செயல்படுத்தப்படுகின்ற **அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில்** ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் உழவர் நலன் சார்ந்த திட்டங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதன் மூலம் வளர்ச்சியும், கிராம அடிப்படை தேவைக்கான நீர் ஆதாரங்களை சீர் செய்து உருவாக்குதல் மற்றும் இதர கட்டுமான பணிகள் ஊரக வளர்ச்சி துறை போன்ற இதர துறைகளுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுவதன் மூலம் தன்னிறைவு பெற்ற கிராமங்களாகவும் உருவாக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் ஓர் முக்கிய அம்சமாக தரிசு நிலங்களை கண்டறிந்து, 10 ஏக்கருக்கு மேல் தொடர்ச்சியாக இருப்பின் அதனை தரிசு நில தொகுப்பாகவும், 10 ஏக்கருக்கு குறைவாக இருப்பின் அவற்றை தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மூலம் தரிசு நிலங்களில் உள்ள புதர்களை நீக்கி, உழவு செய்யப்பட்டு பயறு,சிறுதானியம் மற்றும் எண்ணெய்வித்து போன்ற மானாவாரி பயிர்கள் சாகுபடி செய்திட இடுபொருட்கள் வழங்கப்பட்டு சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் கிராமங்களின் நிகர சாகுபடி பரப்பு அதிகரிக்கப்பட்டு வருகிறது.

<u>திட்டத்தின் செயல்பாடுகள் :</u>

1. கிராமங்களில் பசுமை பரப்பை அதிகரித்திட மரக்கன்றுகள் வழங்குதல்.
2. தரிசு நிலங்களை தொகுப்பாக சாகுபடிக்கு கொண்டுவருதல்.
3. அத்தொகுப்புகளில் பாசன நீர் ஆதாரங்களை உருவாக்குதல் (ஆழ்துளை / குழாய்க் கிணறுகள் அமைத்தல் மற்றும் நீர் செறிவூட்டும் அமைப்புகளை ஏற்படுத்துதல்).
4. சூரிய சக்தி (Solar) / மின் சக்தி (EB Connection) மோட்டார்களை தொகுப்பு நிலங்களில் அரசு முழு மானியத்தில் அமைத்தல்.
5. அவற்றில் சொட்டு நீர் பாசனம் அமைத்து பலன் தரும் மரக்கன்றுகள், தண்ணீர் குறைவாக தேவைப்படும் வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்தல்.
6. திட்ட கிராமங்களில் ஏரி / குளம் / வரத்து கால்வாய்கள் தூர்வாருதல் மற்றும் பண்ணைக்குட்டைகள் அமைத்தல்.
7. ஆதிதிராவிட/பழங்குடியின விவசாயிகளுக்கு இலவசமாக / முழு மானியத்தில் ஆழ்துளைக் கிணறு/குழாய் கிணறு அமைத்து மின் இணைப்பு பெற்று வழங்குதல்.
8. வேளாண் பொருட்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்தல்
9. கால்நடை நலன்காத்து பால் உற்பத்தியை பெருக்குதல்.
10. வருவாய்த்துறை மூலம் புதிய பட்டா/ பட்டா மாறுதல் வழங்குதல்
11. கூட்டுறவு சங்கங்கள் மூலம் அதிகளவு பயிர்க்கடன்கள் வழங்குதல்
12. வேளாண்மை - உழவர் நலத்துறையின் திட்ட இனங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல் (Dovetailed Schemes)

<u>திட்டத்தில் பங்கேற்கும் துறைகள்:</u>

வேளாண்மை - உழவர் நலத்துறையில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், விதைச்சான்றுத்துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் உழவர் நலன் தொடர்புடைய இதர துறைகளான ஊரக வளர்ச்சித்துறை, வருவாய்த்துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, நீர்வள ஆதாரத்துறை, எரிசக்தி துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை உள்ளிட்ட துறைகளின் திட்டங்கள் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுகிறது.

## கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கீழ், தரிசு நிலத் தொகுப்புகள் அமைத்து பராமரிப்பதற்கான வழிமுறைகள்

### அ. தரிசு நிலத் தொகுப்புகள் அமைக்கும் முன் மேற்கொள்ள வேண்டிய பணிகள்

1. <u>கிராம திட்ட செயலாக்க குழு அமைத்தல்:</u>

- இத்திட்டம் சிறப்புற செயல்படுத்திட தேர்வு செய்யப்பட்ட கிராமப் பஞ்சாயத்தில் பணிபுரியும் வேளாண்மை மற்றும் வேளாண்மை தொடர்புடைய துறைகளின் அலுவலர்களைக் கொண்டு கிராம திட்ட செயலாக்க குழு அமைக்கப்பட்டுள்ளது.
- அச்செயலாக்கக் குழுவிற்கு வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் தலைவராக செயல்படுவார்.
- தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திற்கும் உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி விதை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர்(வேளாண் வணிகம்) இவர்களில் ஒருவரை கிராம அளவிலான திட்ட பொறுப்பு அலுவலராக (Nodal Officer) நியமிக்கப்பட்டுள்ளனர்.

2. <u>கிராம திட்ட செயலாக்கக் குழுவின் கூட்டம் நடத்துதல்:</u>

- குழுவின் தலைவர் கிராம திட்ட செயலாக்கக் குழுவை கூட்டி, தேர்வு செய்யப்பட்ட கிராம பஞ்சாயத்தில் இத்திட்டத்தின் நோக்கம், முக்கிய அம்சங்கள், திட்ட செயல்பாடுகள், அனைத்துத் துறைகளின் பங்கேற்பின் மூலம் கிராமத் தன்னிறைவு போன்ற திட்ட விபரங்களை எடுத்துரைக்க வேண்டும்.
- பின்னர், அக்கிராமப் பஞ்சாயத்தில் தரிசு நில தொகுப்பு அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க வேண்டும்.

3. <u>அடிப்படை புள்ளி விபரங்கள் சேகரித்தல்:</u>

   - திட்டத்தில் கிராம பஞ்சாயத்துகள் தேர்வு செய்யப்பட்டவுடன், சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் / அலுவலர்களிடம் இருந்து கிராம வரைபடத்தையும், "அ" பதிவேட்டையும் பெற்று, இதர தரிசு (other fallow) என்ற பிரிவின் கீழ், இரண்டு முதல் ஐந்து ஆண்டுகள் வரை சாகுபடி செய்யப்படாமல் உள்ள நிலங்களையும், சாகுபடிக்கு லாயக்கான தரிசு (Cultivable waste) என்ற பிரிவின் கீழ், ஐந்து ஆண்டுகள் மற்றும் அதற்கு மேலான ஆண்டுகள் சாகுபடி செய்யப்படாத நிலங்களையும்

சர்வே எண் வாரியாகவும், விவசாயிகள் வாரியாகவும் சேகரிக்க வேண்டும்.

- கிராம பஞ்சாயத்துக்களில் கீழ் உள்ள வருவாய் கிராமங்கள் மற்றும் குக்கிராமங்களில் உள்ள தரிசு நில ஆய்விற்கு, அந்தக் கிராமங்களில் வசித்துவரும் ஓய்வு பெற்ற கிராமமுனுசீப், கிராம கணக்காளர், கிராம உதவியாளர் மற்றும் முன்னோடி விவசாயிகளின் உதவியை நாடலாம்.
- கிராம பஞ்சாயத்துகளில் உள்ள அனைத்து தரிசு நலங்களையும் பொறுப்பு அலுவலர்கள் நேரிடையாக ஆய்விட வேண்டும். அவ்வாறு ஆய்வு செய்யும்போது, சிறு மலைக்குன்றுகள் இருந்தால் மலை குன்றுகளுக்கு இடையில் உள்ள தரிசுநிலங்களையும் விடுபடாமல் கணக்கில் எடுத்துக்கொண்டு, தொகுப்பு அமைக்க வேண்டும். எக்காரணம் கொண்டும், கிராமப் பஞ்சாயத்துக்களில் உள்ள தரிசு தொகுப்பு நிலங்கள் விடுபட்டுவிடக்கூடாது.
- பெறப்பட்ட புள்ளிவிவரங்கள் அடிப்படையிலும் கிராம செயலாக்கக் குழு கூட்டத்தில் பெறப்பட்ட ஆலோசனையின் அடிப்படையிலும் பொறுப்பு அலுவலர் கிராம பஞ்சாயத்தில் உள்ள தரிசு நிலங்களை சம்பந்தப்பட்ட விவசாயிகளுடன் நேரில் பார்வையிட வேண்டும்.
- பெறப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில் 10 லிருந்து 15 ஏக்கர் வரை தொகுப்பாக உள்ள தரிசு நிலங்களையும் 10 ஏக்கருக்குக் குறைவான பரப்பு கொண்ட தரிசு நிலங்களையும் தனித்தனியாக பிரிக்க வேண்டும்.
- 10 லிருந்து 15 ஏக்கர் வரை தரிசு நிலங்களை தொகுப்புகளாக அமைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- 10 ஏக்கருக்கு குறைவாக ஒரு இடத்தில் தரிசு நிலங்கள் இருப்பின் அதனை தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் முட்புதர்களை அகற்றி சாகுபடிக்கு கொண்டு வர வேண்டும்.

4. <u>தரிசு நிலத் தொகுப்புகளுக்கான தகுதிகள்:</u>

- தரிசு நிலங்கள் 10 முதல் 15 ஏக்கர் வரை தொடர்ச்சியாக இருக்க வேண்டும்.
- தரிசு நிலங்கள் தொடர்ச்சியாக ஒரே இடத்தில் இல்லாத பட்சத்தில், இடையில் உள்ள 2 முதல் 3 ஏக்கர் வரையிலான விளை நிலங்கள் இருந்தால், அதையும் சேர்த்து, தரிசு நலத் தொகுப்போடு கணக்கிட்டுக் கொள்ளலாம்.

- 10 ஏக்கருக்கும் குறைவாகவே உள்ள தரிசு நிலங்கள் கிராமங்களில் அதிக அளவில் இருப்பதாக தெரிய வரும் நிலையில், கிராம நிர்வாக அலுவலர் அல்லது அலுவலர்களிடம் இருந்து 10 லிருந்து 15 ஏக்கர் வரை தரிசு நிலத் தொகுப்புகள் ஏதும் இக்கிராமங்களில் ஒரே இடத்தில் அமையவில்லை என்பதற்கான சான்றினை உரிய படிவத்தில் பெற்று பராமரிக்க வேண்டும்.
- ஒவ்வொரு தரிசு நில தொகுப்பும் குறைந்தபட்சம் 8 விவசாயிகள் கொண்டதாக இருக்க வேண்டும்.
- தரிசு நில தொகுப்பு விவசாயிகள் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்.

| வ. எண் | தொகுப்பு நிலத்திற்குள் அடங்கும் விவசாயி பெயர் மற்றும் தகப்பனார் பெயர் | சிறு / குறு / இதர விவசாயி | ஆதி திராவிடர் / பழங்குடியினர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சிறுபான்மையினர் | தொகுப்பு நிலத்திற்கு உட்பட்ட புல எண்கள் | பரப்பு (ஏக்கர்) | நில வகைப்பாடு (நஞ்சை / புஞ்சை / மானாவாரி) | நில உரிமையாளர் பெயர் (நடப்பு கணினி - அ பதிவேடு படி) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| மொத்தம் | | | | | | | |

- தரிசு நிலத்தொகுப்பில் உள்ள ஒரு விவசாயி இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக 2 ஏக்கர் வரை மட்டுமே பயன் பெற இயலும்.
- தரிசுநில தொகுப்பு அமைப்பதில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினருக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

- அத்தரிசு நிலத் தொகுப்பில் உள்ள முட்புதர்களை சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள் தங்களது சொந்த செலவில் அகற்ற வேண்டும். இதற்காக தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் தரிசு நில மேம்பாட்டு திட்ட உதவியையும் ஒருங்கிணைத்துக் கொள்ளலாம்.
- தரிசு நிலத் தொகுப்புகளில் உள்ள மண் வளத்தினை அறிய, மண் பரிசோதனை வேளாண் துறையால் மேற்கொள்ளப்படும்.

5. <u>நிலத்தடி நீர் ஆய்வு (Geo-Physical Survey):</u>

- தரிசு நில தொகுப்புகள் ஏற்படுத்தப்பட்ட பின் அத்தொகுப்பு தொடர்பான விபரங்களை (விவசாயியின் பெயர் வாரியாக, பரப்பு மற்றும் சர்வே எண், அமைந்துள்ள குக்கிராமம்) சம்மந்தப்பட்ட உதவி செயற் பொறியாளர் (வேளாண் பொறியியல்) அவர்களிடம் அளித்து நிலத்தடி நீர் ஆய்வு மேற்கொள்ள கேட்டுக்கொள்ள வேண்டும்.
- வேளாண்மை பொறியியல் துறை மூலம் நிலத்தடி நீர் ஆய்வு உடனடியாக மேற்கொள்ளப்படும்.
- ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பெறப்பட்ட அறிக்கையினை சம்பந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குனர் / தோட்டக்கலை உதவி இயக்குனருக்கு வழங்கிட வேண்டும்.
- அறிக்கையின் அடிப்படையில் அத்தொகுப்பினை சங்கங்களாக பதிவு செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. <u>தரிசு நில சங்கங்கள் பதிவு செய்தல் மற்றும் செயல்பாடுகள்:</u>

**பதிவு செய்தல்:**

- தகுதிவாய்ந்த தரிசு நில தொகுப்புகள் 1975-ஆம் ஆண்டின் தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் கீழ் சங்கங்களாக சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.
- தரிசு நிலத் தொகுப்பினை பதிவு செய்வதற்கு கீழ்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
    - ஆழ்துளை/குழாய்க் கிணறு / திறந்தவெளி கிணறு அமையவுள்ள தரிசு நிலத் தொகுப்புகளில் உள்ள விவசாயிகளிடம் ஆதார் அடையாள அட்டை, நிரந்தர கணக்கெண் (PAN Card) போன்ற ஆவண நகலினை பெற வேண்டும்.
    - தரிசு நிலத் தொகுப்பிற்கு -----------(கிராம பஞ்சாயத்து பெயர் சேர்த்து ) தரிசு நிலத்தொகுப்பு குழு என்று பெயரிடப்பட வேண்டும்.

- தரிசு நில தொகுப்பு குழுவில் உள்ள விவசாயிகள் அனைவரும் கூடி, தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளரை தேர்ந்தெடுக்க வேண்டும்.
- தரிசு நிலத் தொகுப்பின் பெயரில் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளரை கொண்டு அருகில் உள்ள வங்கியில் ஒரு கூட்டு வங்கிக்கணக்கு (நடப்பு / சேமிப்பு) தொடங்க வேண்டும்.
- பதிவு விண்ணப்பத்தில் சாட்சி கையொப்பம் இட இரண்டு நபர்களை தேர்வு செய்து அவர்களின் அடையாளத்திற்கான அட்டை நகலினையும் பெற வேண்டும்.
- அவ்வாறு பதிவு செய்யப்பட்ட தரிசுநில தொகுப்பு குழு உறுப்பினர்கள் அனைவரும் சங்கத்தின் அனைத்துவிதமான செயல்பாடுகளில் தவறாது பங்கேற்க வேண்டும்.
- பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் பதிவுச்சான்று நகலினை சம்மந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் (வேபொ) அவர்களிடம் அளிக்கவேண்டும்.

**செயல்பாடுகள்:**

- ஒவ்வொரு குழு உறுப்பினரும் மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் ரூ.100/- என்ற அளவில் வங்கிக்கணக்கில் செலுத்தி சேமித்திட வேண்டும் (பின்னர் இத்தொகை பராமரிப்பு செலவிற்கு பயன்படுத்தப்படும்).
- மாதம் ஒரு முறை, தரிசு நில சங்க உறுப்பினர்களை அழைத்து, கூட்டத்தினை நடத்த வேண்டும். அக்கூட்டத்தில் தரிசு நில சங்க நிர்வாகம் தொடர்பான அனைத்து விபரங்களையும் விவாதித்து, கூட்ட நடவடிக்கைகளையும், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் கூட்ட நடவடிக்கை பதிவேட்டில் பதிவிட வேண்டும்.
- ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரம் மாதம் 1-ஆம் தேதி கணக்குகள் துவங்கப்பட்டு அடுத்த ஆண்டு மார்ச் 31-ஆம் தேதியில் முடிக்கப்பட வேண்டும்.
- சங்கத்தின் ஒவ்வொரு நிதியாண்டு முடிந்ததும் அந்த நிதியாண்டின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட வேண்டும்.
- மேலும், சங்கத்தினை வருடத்திற்கு ஒருமுறை புதுப்பித்தல் போன்ற அனைத்து நிபந்தனைகளையும் குழு பின்பற்ற வேண்டும்.

7. <u>பாசன நீர் பங்கீட்டு முறை</u>

- தரிசு நிலத்தொகுப்பில் திறந்தவெளி பாசனம் அனுமதிக்கப்படுவதில்லை. நுண்ணீர் பாசனத்தின் மூலம் மட்டுமே பாசனம் செய்யப்பட வேண்டும்.
- நீர் அதிகமாக தேவைப்படும் நெல், கரும்பு, வாழை, தென்னை, எண்ணெய்ப்பனை உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்ய அனுமதிக்க கூடாது.
- மா, கொய்யா, நெல்லி, சப்போட்டா, எலுமிச்சை போன்ற பல்லாண்டு வளர்ந்து வருமானம் தரக்கூடிய தோட்டக்கலைப் பயிர்களை நட வேண்டும்.
- நீர் பங்கீட்டு முறையை செயல்படுத்துவதற்காக பொறுப்பு அலுவலர் (Nodal Officer), உதவி பொறியாளர் (வேளாண் பொறியியல் துறை) உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் விவசாயிகளை கொண்டு உருவாக்கப்பட்ட குழுவானது, தங்களுக்குள் பாசனத்திற்கான நீரை பயன்படுத்துவது தொடர்பாக கூடி முடிவெடுக்க வேண்டும். கிணற்றிலிருந்து கிடைக்கும் நீர் இருப்பின் அளவைப்பொருத்தும், மண்ணின் தன்மைக்கு ஏற்பவும், தட்பவெப்ப சீதோஷ்ண நிலைக்கு ஏற்பவும் மற்றும் ஒரு நாளுக்கு கிடைக்கும் மின் விநியோக நேரத்திற்கு ஏற்பவும் நீர் பங்கீட்டுமுறை கணக்கிடப்பட வேண்டும்.
- பாசனம் மேற்கொள்ளும் போது, சொட்டு நீர் பாசன கருவிகள், சூரிய ஒளி தகடுகள், மின் இணைப்பு மற்றும் மோட்டார்களில் ஏற்படும் குறைபாடுகளுக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களை தொடர்பு கொண்டு உத்திரவாத காலத்திற்குள் இருப்பின், நிவர்த்தி செய்வதற்கு குழு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- சொட்டு நீர் பாசனம் அமைத்து, சாகுபடி செய்யப்படும் மர/பழ மரங்களின் நீர் தேவைக்கு ஏற்றவாறும், விவசாயிகளின் பாசன பரப்பிற்கு ஏற்றவாறும் நீர் பங்கீடு செய்யப்பட வேண்டும்.
- கிணற்றிலிருந்து கிடைக்கும் நீரின் அளவைப்பொருத்து தொகுப்பிலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் பாசன நீர் கிடைக்கும் பொருட்டு, சுழற்சி (Rotation) முறையை கடைப்பிடித்து பாசன நீர் வழங்கலாம். அவ்வாறு சுழற்சி முறையைக் கடைபிடிக்கும் போது ஆழ்துளை / குழாய் கிணறு அமைந்துள்ள இடத்திலிருந்து தொலைவில் உள்ள விவசாயிகளின் நிலங்களுக்கு முன்னுரிமை கொடுத்து பாசன நீர் வழங்கப்பட வேண்டும்.
- லும் சிறுதானியங்கள், பயறுவகை பயிர்கள், எண்ணெய்வித்துப் பயிர்கள் உள்ளிட்ட குறுகிய கால மற்றும் மானாவாரி பயிர்களை ஊடுபயிராக பருவ

மழை காலங்களில் சாகுபடி மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகைய பயிர்களுக்கு கிணற்றில் இருந்து கிடைக்கும் நீரினை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

- பருவ மழைக் காலங்களில் மழைநீரை முறையாக சேகரித்து, அவற்றின் மூலம் ஊடுபயிராக மானாவாரி பயிர்களை சாகுபடி மேற்கொள்ளப்பட வேண்டும்.
- மேலே கூறப்பட்டுள்ள நீர் பங்கீட்டு முறைகளில், ஒவ்வொரு தரிசுநிலத் தொகுப்பு நிலங்களில் நிலவும் கள சூழ்நிலைக்கு ஏற்றவாறு சிறு மாற்றங்கள் செய்து பாசன நீரை பங்கீட்டு வழங்கலாம். சுருங்கக்கூறின் நீர் பங்கீட்டு விநியோகம் தொகுப்பில் உள்ள அனைத்து நிலங்களுக்கும் சம நிலை பங்கீட்டு முறையில் (Equity distribution) பாசன நீர் வழங்கப்பட வேண்டும். மேலும், சமநிலை பங்கீட்டு முறையில் பாசனம் மேற்கொள்வதற்கான கால அட்டவணை (Irrigaion Time Schedule) தயாரித்து, ஒப்பந்தம் மேற்கொண்டு அதனை தவறாது பின்பற்ற வேண்டும்.

8. <u>மின் இணைப்பு மற்றும் பராமரிப்பிற்கான வழிமுறைகள் :</u>

- மின் இணைப்புகள் வேளாண்மை உதவி இயக்குநர் / தோட்டக்கலை உதவி இயக்குநர் பெயரில் பெற வேண்டும்.
- மின் இணைப்புகளுக்கு மின் அளவீட்டுக் கருவி பொறுத்தப்பட்டு மின் நுகர்வு கணக்கிடப்படும்.
- அத்தகைய மின் நுகர்விற்கான கட்டணத்தினை 2401 – 00 – 104 AG 30503 கணக்குத் தலைப்பில் வேளாண்மை உதவி இயக்குநர் / தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலர்களுக்கு உரிய நிதி வழங்கப்படும்.
- மின் கட்டணத்தினை உரிய தேதியில் தவறாது செலுத்தப்பட வேண்டும்.
- ஒவ்வொரு காலாண்டும் வேளாண்மை உதவி இயக்குநர் அல்லது தோட்டக்கலை உதவி இயக்குநர் தரிசு நிலத் தொகுப்புக்கு வருகைபுரிந்து, மின்மோட்டார் இயங்குவதை ஆய்விட வேண்டும்.

9. <u>அறுவடை மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான வழிமுறைகள் :</u>

- அறுவடைக்கு தேவையான இயந்திரங்களை உரிய நேரத்தில் ஏற்பாடு செய்து தர வேண்டும்.
- அறுவடையான வேளாண் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைத்திடும் பொருட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அல்லது உழவர் சந்தையில் விற்பனை மேற்கொள்ள தரிசு நில சங்க குழு ஊக்குவிக்கப்பட வேண்டும்.

- மதிப்பு கூட்ட வாய்ப்புள்ள வேளாண் விளைபொருட்களுக்கு மதிப்பு கூட்டி விற்பனை மேற்கொள்ள வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் உரிய ஏற்பாடுகள் செய்து தர வேண்டும்.

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்**

**//உண்மை நகல்//**

பிரிவு அலுவலர் 8/12/22

8/12/22